பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 06 2026** **TUESDAY** **6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. ஜல் ஜீவன் இயக்கத்தின் இரண்டாவது கட்ட செயலாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே இன்று கையெழுத்தானது.

2. நோய் தடுப்புப் பணிகளில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

3. தவெக அரசு பொறுப்பேற்றபின் மாநிலத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. தென்மேற்கு பருவமழை நாளை மறுநாள் கேரளத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Hariharan Amsakarunan — Arjun** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . .

<<<<<<>>>>>>

ஜல் ஜீவன் இயக்கத்தின் இரண்டாவது கட்ட செயலாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே இன்று கையெழுத்தானது.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் புதுதில்லியிலிருந்தும், தமிழக முதலமைச்சர் திரு விஜய் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்தும் காணொலி காட்சி வாயிலாக கலந்துகொண்டு அவர்கள் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

முதல்கட்டமாக 18 ஆயிரத்து 123 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டதன் அடிப்படையில் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் முதல்கட்டமாக 2 ஆயிரத்து 177 கோடி ரூபாய் நிதியுதவி கிடைக்கப்பெறும்.

கிராமப்புறங்களில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாப்பான மற்றும் நிலையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் ஜல் ஜீவன் எனப்படும் உயிர் நீர் இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

<<<<<<>>>>>>

நோய் தடுப்புப் பணிகளில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் **Bathinda** எயிம்ஸ் மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், கிராம பஞ்சாயத்துகள் மூலமாக **30** வயதுக்கு மேற்பட்டோருக்கு தொடர் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஆஷா மற்றும் முன்கள மருத்துவப்பணியாளர்கள் மூலம் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

**36** கோடிக்கும் மேற்பட்டோருக்கு வாய் புற்றுநோய் பரிசோதனை, மற்றும் **17** கோடி பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் ஒரு லட்சத்து **82** ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் சிகிச்சை மையங்கள் மூலம் நோய் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு நட்டா கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்திலிருந்து, மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட உள்ள ஒரு காலியிடத்தை நிரப்புவதற்கான இடைத்தேர்தல் அறிவிப்பை தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகம் இன்று வெளியிட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள பேரவையின் கூடுதல் செயலரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திருமதி தேன்மொழி, இம்மாதம் 8-ஆம் தேதிவரை வேட்புமனுக்களை காலை 11 மணிமுதல், பிற்பகல் 3 மணிக்குள் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 9-ஆம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை நடைடிபெறும், வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள 11 -ஆம் தேதி கடைசிநாள் என்று தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் போட்டியிருப்பின் இம்மாதம் 18-ஆம் தேதி காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை தலைமை செயலகத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் தேர்தல் நடத்தும் அதிகாரி திருமதி தேன்மொழி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தஞ்சாவூர் மாவட்டத்தில் சூறாவளி காற்றால் சேதமடைந்த வாழைத் தோட்டங்களை மாநில அமைச்சர் திரு ஷாஜகான் இன்று நேரில் பார்வையிட்டார்.

பாபநாசம் பகுதியில் சுமார் **432** ஹெக்டேரிலும், திருவையாற்றில் **295** ஹெக்டேரிலும் வாழை மரங்கள் பயிரிடப்பட்ட நிலையில், இதுவரை மேறகொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி **82** ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடம் சேத விவரங்களை கேட்டறிந்த அமைச்சர் திரு ஷாஜகான் இந்த சேதம் குறித்து முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நிவாரணம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்.

புஞ்சை நிலங்களில் விளைவிக்கப்படும் வேளாண் பொருட்களை விற்பனை செய்வதற்கான கூடங்களை அரசு ஏற்படுத்தித் தரும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை செயல்பாடுகள் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு விஜய் பாலாஜி தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

இத்துறை மூலம் தயாரிக்கப்படும் வேட்டி — சேலைகள், பவானி ஜமுக்காளம், கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும்

சேலைகள், பரிசுப் பொருட்கள், புதிய ரக வடிவமைப்புகள் உள்ளிட்ட தயாரிப்புகள் குறித்து அதிகாரிகளுடன் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றபின் சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னை சாலிகிராமத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருச்சியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் திரு விஜய், மக்கள் பிரச்சினை குறித்து குறிப்பாக குழந்தைகள், பெண்கள் வன்முறைக்கு ஆளாவது குறித்து எதுவும் பேசவில்லை என்று தெரிவித்தார்.

அரசு நிர்வாகத்திலும், மாநிலத்தின் பாதுகாப்பிலும் தவெக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக வெற்றி வாய்ப்பை இழந்தாலும், எதிர்வரும் தேர்தலில் மகத்தான வெற்றிபெறும் என்று

அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய சூழ்நிலையில் மீண்டெழுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கட்சி மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது மாறி மாறி வரும், அதை கண்டு தங்களது கட்சியினர் துவண்டுவிட மாட்டார்கள் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

வேலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் துணை கணக்கெடுப்பு அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ் ஆய்வு மேற்கொண்டார்.

நாட்டின் எதிர்கால திட்டமிடல் மற்றும் வருங்காலத்தில் வரவிருக்கும் நலத்திட்டங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றுக்கு உதவும் வகையில் துல்லியமாக கணக்கெடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

*(Sound Byte — ஆட்சியர் லீலா அலெக்ஸ் - 51 Sec. )*

<<<<<<>>>>>>

தென்மேற்கு பருவமழை நாளை மறுநாள் கேரளத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 51 Sec.***

<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டப் பணிகள் குறித்து மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னி அரசு தலைமையில் சென்னையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

-----------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை அரசு தலைமை மருத்துவமனையில் ஆட்சியர் திருமதி பிரியா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு-2027 மூன்று நாட்கள் பயிற்சி வகுப்பினை ஆட்சியர் திருமதி சினேகா துவக்கி வைத்து உரையாற்றினார்.

--------------

சென்னை மாவட்டத்தை சேர்ந்த சீர்மரபினர், நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் G S சமீரன் சென்னை மதனகுப்பம் ஏரி மற்றும் பூங்கா பகுதியில் மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

--------------

தெற்கு ரயில்வேயின் முதன்மை வர்த்தக மேலாளராக திரு ஆர்.செந்தில்குமார் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Hariharan Amsakarunan — Arjun** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-18, 21-10** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Nur Mohd Azriyn - Wee Kiong Tan** இணையை வென்றது.

------

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.**

**Taunton-ல் இப்போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<<<END>>>>>>**